ஆறு வருடங்களாக சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த .ரமேஷ் என்பவரை அரசு செலவில் மீட்டு மறுவாழ்வு அளித்தற்காக தலைமைச் செயலகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசரைச் சந்தித்து தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் மற்றும் தமிழ் நாடு அரசிற்கு நன்றி தெரிவித்தார் இந்த சந்திப்பின்போது அயலகத் தமிழர் நலத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புழல் ஏரியிலிருந்து நீர் திறப்பு!

தாழ்வானப் பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்கவும்!

தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

சென்னை, டிச.14-

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான புழல் ஏரியானது 20.86 சதுர கி.மீ பரப்பளவில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் அமைந்துள்ளது. ஏரியின் நீர் மட்ட மொத்த உயரம் 21.20 அடியாகும். இதன் முழுக்கொள்ளளவு 3300 மில்லியன் கன அடியாகும். நேற்று (13.12.2024) காலை 6.00 மணி நிலவரப்படி நீர் இருப்பு 19.69 அடியாகவும், கொள்ளளவு 2.950 மில்லியன் கன அடியாகவும் மற்றும் நீர் வரத்து வினாடிக்கு 2.281 கன அடியாகவும் உள்ளது.

ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக நீர்வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருகிறது. எனவே அணையின் நீரினை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, புழல் ஏரியின் மீகைநீர் கால்வாயின் வெள்ள தணிப்புக்காக (Flood Moderation in Redhills Surplus Course) ஏரியிலிருந்து நேற்று (13.12.2024) காலை 09.00 மணியளவில் வினாடிக்கு 500 கன அடி நீர் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏரிக்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரிநீர் படிப்படியாக திறக்கப்படும் என முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது.

எனவே, புழல் ஏரியின் நீர் வெளியேறும் வாய்க்கால் செல்லும் கிராமங்களான நாரவாரிக்குப்பம், வடகரை, கிராண்ட்லைன், புழல், வடபெரும்பாக்கம், மஞ்சம்பாக்கம், கொசப்பூர், மணலி மற்றும் சடையான்குப்பம் ஆகிய பகுதிகளில் கால்வாயின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தரும்மாறும் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நீர் வெளியேற்றம்!

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரி 25.51 சதுர கி.மீ பரப்பளவில் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்துர் வட்டத்தில் அமைந்துள்ளது. ஏரியின் நீர் மட்ட மொத்த உயரம் 24.00 அடியாகும். இதன் முழுக்கொள்ளளவு 3645 மில்லியன் கன அடியாகும். நேற்று (13.12.2024) காலை 06.00 மணி நிலவரப்படி நீர் இருப்பு 23.29 அடியாகவும், கொள்ளளவு 3.453 மில்லியன் கன அடியாகவும் மற்றும் நீர் வரத்து வினாடிக்கு 6.498 கன அடியாகவும் உள்ளது. ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக நீர்வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருகிறது. எனவே அணையின் நீரினை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை அடையாற்றின் வெள்ள தணிப்புக்காக (Flood Moderation in Adayar River) ஏரியிலிருந்து நேற்று (13.12.2024) காலை 08.00 மணியளவில் வினாடிக்கு 1000 கனஅடி நீர் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏரிக்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரிநீர் படிப்படியாக திறக்கப்படும் என முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது.

எனவே, ஏரியிலிருந்து நீர் வெளியேறும் வாய்க்கால் செல்லும் கிராமங்களான சிறுகளத்துர் காவனூர் குன்றத்துர், திருமுடிவாக்கம் வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தருமாறும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், **பூண்டி வெள்ள அபாய எச்சரிக்கை!**

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், பூண்டி 34.58 சதுர கி.மீ பரப்பளவில் திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. நீர்த் தேக்கத்தின் நீர் மட்ட மொத்த உயரம் 35 அடியாகும். இதன் முழு கொள்ளளவு 3.231 மில்லியன் கன அடியாகும். நேற்று (13.12.2024) காலை 4.00 மணி நிலவரப்படி நீர் இருப்பு 34.68 அடியாகவும் கொள்ளளவு 3041மில்லியன் கன அடியாகவும் மற்றும் பூண்டியின் நீர் வரத்து 9.890 கன அடியாக உள்ளது.

தற்போது அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நீர்வரத்து தொடர்ச்சியாக உள்ளதால் சத்தியமூர்த்தி சாகர் நீர்த் தேக்கத்தின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. அணைக்கு வரும் நீர் வரத்து 35 அடியை தொட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுவதால் அணையின் வெள்ளநீர் வழிகாட்டு தலின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கத்திற்கு வரும் உபரி நீரை அணையின் பாதுகாப்பு கருதி நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று முன்தினம் (12.12.2024) மாலை 5.00 மணி அளவில் விநாடிக்கு 5.000 கன அடி உபரி நீர் திறக்கப்பட்ட நிலையில், நேற்று (13.12.2024) காலை 6.30 மணி அளவில் விநாடிக்கு 12.000 கன அடியாக உபரி நீர் வெளியேற்றப்படும்.

எனவே நீர்த்தேக்கத்திலிருந்து மிகை நீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ஆட்ரம்பாக்கம், ஓதப்பை, நெய்வேலி, எறையூர், பீமன்தோப்பு, கொரக்கந்தண்டலம், சோமதேவன்பட்டு, மெய்யூர், வெள்ளியூர், தாமரைப்பாக்கம், திருக்கண்டலம், ஆத்துர், பண்டிக்காவனூர், ஜெகநாதபுரம், புதுகுப்பம், கன்னிப்பாளையம், வன்னிப்பாக்கம், அகூவன்பாளையம், மடியூர், சீமாவரம், வெள்ளிவாயல்சாவடி, நாப்பாளையம், இடையான்சாவடி, மணலி, மணலி புதுநகர், சடையான்குப்பம், எண்ணூர் மற்றும் கொசஸ்தலையாற்றின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தருமாறும் மேலும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பாக இருக்க தக்க நடவடிக்கை எடுக்கமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 17வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளாக புத்தகப்பை, நோட்டு, பென்சில் பேனா ரப்பர் பல் சட்டை ஜாமின்றிபாக்ஸ் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் மூர்த்தி, பாலாஜி, சண்முக பிரியன், சிவகுமார், எம். என் .அஜய் தென்னவன், சுதர்சன், பூபாலன், விஜயன், வினோத், நாகராஜ், ராஜ்குமார், கோவிந்தன், கார்த்திக், செந்தில், வக்கீல் தளபதி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புதுக்கோட்டை மு. இயலரசன்
டிசம்பர் 14 (1992)

இளமைப் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய பின்னர் கழகக் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரப்பியவர்.

ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பணிக்காக தனது பணியினைத் துறந்தவர்.

'தன்மானம்' என்ற வார இதழ் நடத்தியவர்.

"ஈட்டி முனைபோல் கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் எடுத்தெறிந்து வீசுபவர்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு: முதலமைச்சரின் சீரிய நடவடிக்கையால்

அடையாறு ஆற்றங்கரையோரம் குடியிருப்புகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, டிச.14

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (13.12.2024) செம்பரம்பாக்கம் ஏரியின் உபரிநீர் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, சைதாப்பேட்டை, ஆடுதொட்டி அருகில் உள்ள செட்டித் தோட்டம் பகுதியில் உள்ள அடையாறு ஆற்றங்கரையோரப் பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழையின் இறுதி கட்டம் என்பது தற்போது வேகம் எடுக்கத் தொடங்கியுள்ளது. கடந்த 11.12.2024 முதல் சென்னையில் மட்டுமல்லாமல் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பெரிய அளவில் மழை பொழிந்துக் கொண்டிருந்தது. இந்தநிலையில் சென்னைக்கு குடிநீர் ஆதாரமான பல்வேறு ஏரிகளும், 2 நாட்கள் முன்புவரை 80% கொள்ளளவு வரை மட்டுமே இருந்தது. தற்போது முழு அளவில் நிரம்ப தொடங்கியுள்ளது. குறிப்பாக செம்பரம்பாக்கம் ஏரியைப் பொறுத்தவரை அதன் முழு கொள்ளளவு 3.64 டிஎம்சி ஆகும். தற்போது இருக்கின்ற நீரின் அளவு 3.49 டிஎம்சி ஆக இருந்துக் கொண்டிருக்கிறது. 24 அடி உயரமுள்ள ஏரி தற்போது 23.42 அடியாக இருந்து வருகிறது. அடுத்த வாரம் 2 அல்லது 3 நாட்கள் மழைப் பொழியும் நிலை உள்ளதால் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சம்மந்தப்பட்ட துறையின் அலுவலர்கள் செம்பரம்பாக்கம் ஏரியின் நீரின் அளவினை குறைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நாளை மறுநாளுக்குள் 22 அடியாக குறைத்து ஏரியின் அளவை குறைப்பதற்கு ஏதுவாக நீரினை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

4500 கன அடி நீர் திறப்பு!

செம்பரம்பாக்கம் ஏரியைப் பொறுத்தவரை ஏரிக்கு வருகின்ற நீரின் அளவானது 2000 கனஅடியாக இருந்துக் கொண்டு வருகிறது. தற்போது இன்று காலை 10.30 மணிக்குள் 4500 கன அடி நீர் திறந்து வைக்கப்பட்டு வருகிறது. அடையாற்றினைப் பொறுத்தவரை செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வருகின்ற உபரிநீர் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பல்வேறு ஏரிகளில் உள்ள உபரிநீர், மழைநீர் ஆகியவைதான் இந்த ஆறுகளுக்கு வரும். இந்தநிலையில் இந்த ஆறு என்பது 20.00030.000 கனஅடி நீர் வந்தாலே பெரிய அளவிலான குடியிருப்புகள் பாதிக்கப்படும். ஆலந்தூர், பல்லாவரம், சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், மயிலாப்பூர், வேளச்சேரி போன்ற பல்வேறு தொகுதிகளில் உள்ள குடியிருப்புகள் இந்த ஆற்றங்கரையோரம் உள்ள டக்கியுள்ளது. 30.000 கனஅடி நீர் எப்போதெல்லாம் திறந்து விடப்பட்டுள்ளதோ அப்போதெல்லாம் மிகப் பெரிய அளவில் இப்பகுதி குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வெள்ளம் பாதிப்பு!

இந்நிலையில் கடந்த ஒரு வாரத்திற்கு முன் சட்டமன்றத்தில் பெரிய அளவில் விவாதம் ஏற்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 1 இலட்சம் கனஅடி நீர் இந்த ஆறு தாங்கும் என்றார். அப்போது உடனடியாக முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

2015 டிசம்பரில் நடைபெற்றது மனித தவறினால். இதற்கான ஆதாரங்கள் CAG Report இல் இருந்த ஆதாரங்கள். அன்றைக்கு பாராளுமன்றத்தில் சம்மந்தப்பட்ட துறையின் அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டது போன்ற பல்வேறு தகவல்களை முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 1 இலட்சம் கனஅடி நீர் திறந்தாலும் இந்த ஆற்றங்கரையோரம் பகுதி பாதிக்காது என்று சொன்னார்கள். தற்போது இந்த பகுதியில் வந்துக் கொண்டிருக்கும் நீரின் அளவு 11.500 கனஅடி தான். இதில் ஆறு கொள்ளாமல் நீர் சென்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் 2000 கனஅடி நீர் கூடுதலாக வந்தாலும் ஊருக்குள் வந்துவிடும்.

தொடர்ந்து நாங்கள் இதனை 1985, 1995, 2005, 2015 என்று பல்வேறு வெள்ளங்காலங்களில் பார்த்து வருகிறோம். காரணம் இதே பகுதியில் நானும் வசித்து வரும் காரணத்தினால். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ந்து வெள்ளப் பாதிப்புகளை சந்தித்து வருகிறோம். இதைத் தான் அன்றைக்கு சட்டமன்றத்தில் மிகத் தெளிவாக சொன்னோம். 1 இலட்சம் கனஅடி இந்த ஆறு கொள்ளாது என்று சொல்லி, வேண்டுமானால் ஜஜடி, அண்ணா பல்கலைக்கழகம் போன்ற அமைப்புகளிடமிருந்து நிபுணர்களை பார்வையிட செய்து பார்க்கலாம் என்று சொன்னேன். எதிர்க்கட்சி தலைவர் எந்த பதிலும் சொல்லவில்லை.

மழைநீர் வேகமாக செல்கிறது!

முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்த ஆற்றில் மழைநீர் என்பது வேகமாக சென்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆற்றின் முகத்துவாரம் சீனிவாசபுரம் என்னும் பகுதியில் இருக்கின்றது. புரோக்கன் பிரிட்ஜ் என்று சொல்லக்கூடிய அந்த இடத்தில் 2 இலட்சம் கன மீட்டர் அளவில் மணல் திட்டுக்களை கடந்த மே ஜீனில் Chennai Rever Restoration Trust எனும் அமைப்பு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கிய அமைப்பு. அந்த அமைப்பின் மூலம் 2 இலட்சம் கன மீட்டர் அளவிற்கான மணல் திட்டுக்கள் இந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டது.

இத்தகைய மணல் திட்டுக்கள் அகற்றப்பட்டதன் காரணமாக அடையாற்றில் செல்கின்ற 11.500 கன அடி நீர் மிக வேகமாக சென்று கடல் நீரில் கலப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இதனால் அடையார் ஆற்றங்கரையோரம் உள்ள குடியிருப்புகளான குறிப்பாக பட்டினப்பாக்கம் தொடங்கி கோட்டூர்புரம், சின்னமலை, திடீர்நகர், கோதாமேடு, சலவையார் காலனி, ஜோதிநகர், செட்டித்தோட்டம், நெருப்பு மேடு, எம்ஜிஆர் நகர், ஜோதிராமலிங்கம் நகர், முத்துநகர் பிளாக், அம்பேத்கார் நகர், பர்மா காலனி, பல்லாவரம் போன்ற அடையாறு ஆற்றங்கரையோரம் அருகில் உள்ள குடியிருப்புகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பது உறுதியாகியுள்ளது.

குறிப்பாக ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ளப்பாதிப்பு இருக்காது என்கின்ற வகையிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், வெள்ள பாதிப்பு வந்துவிடுமோ என்னும் அச்சத்தில் இருந்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு பயத்தை போக்குவதற்கு உங்களின் மூலம் இந்த செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவைர் ஆர். துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் த.மோகன்குமார் மற்றும் அலுலவர்கள் உடனிருந்தனர்.

பா.ஜ.க.வுடன் கள்ளக் கூட்டணி அம்பலம்

இரட்டை வேடம் போட்டு இஸ்லாமிய மக்களை ஏமாற்றும் அ.தி.மு.க.!

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அறிக்கை!

சென்னை, டிச.14-

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இஸ்லாமிய மக்களை அவதூறு செய்து பேசிய அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியை பணிநீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திட மறுத்து, இஸ்லாமிய மக்களுக்கு மீண்டும் துரோகத்தை செய்துள்ளது அதிமுக. இதன் மூலம் பாஜகவுடன் கள்ளக்கூட்டணியை எடப்பாடி பழனிசாமி தொடர்வது அம்பலமாகி உள்ளது.

விஸ்வ ஹிந்து பரிஷத் நிகழ்ச்சியில் இஸ்லாமியர்களை அவதூறாக பேசிய அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சேகர் குமாரை பணிநீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தை எதிர்க்கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ளனர். "வெறுப்பு பேச்சு", "வகுப்பு வேற்றுமையை தூண்டுதல்", "அரசியலமைப்பை மீறுதல்" என்ற 3 குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய அந்த தீர்மானத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நமது திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினர்களான என்.ஆர்.இளங்கோ, கிரிராஜன், வில்சன், அப்துல்லா ஆகியோர் ஆதரவாக கையெழுத்திட்டுள்ளனர். ஆனால் அ.தி.மு.க.வை சேர்ந்த நான்கு மாநிலங்களவை உறுப்பினர் இருந்தும் ஒருவர் கூட இஸ்லாமிய மக்களுக்கு ஆதரவாக நின்று அந்த தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திடவில்லை.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிறுபான்மை மக்களின் உரிமைக்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் போதெல்லாம் அவர்களுடன் தோளோடு தோள்நின்று ஆதரவாக செயல்பட்டு வரும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் தான். மதப்பிரிவினைவாதிகளுடன் என்றும் கைகோர்க்க மாட்டோம் என அன்றுமுதல் இன்றுவரை நெஞ்சுரத்தோடு களமாடி வருபவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆனால் அடிமைஅதிமுகவோ ஒருபக்கம் பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டோம் என கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டு மறுபக்கம் பாஜகவின் கள்ள உறவை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஏற்கனவே CAA வை ஆதரித்து வாக்களித்து சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயல்பட்ட அடிமை அதிமுக, தற்போதும் சிறுபான்மை மக்களுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறது என்பது இப்போது உள்ளங்கை நெல்லிக்கனியாய் அம்பலமாகி உள்ளது.

"இஸ்லாமியர்கள் கனிவு, சகிப்புத்தன்மை இல்லாத ஆபத்தானவர்கள்" என்று பிளவு படுத்தும் நோக்கம் கொண்ட சொற்களைப் பயன்படுத்தி பேசியிருந்த அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார்க்கு எதிராய் ஒருகையெழுத்து போடக்கூட வக்கற்ற நிலையில் தான் அதிமுக உள்ளது. "இஸ்லாமியருக்கு பாதுகாவலாக இருப்பது அதிமுக மட்டுமே!?" என வாய்கிழிய பேசும் எடப்பாடி பழனிசாமியின் பொய் வேடம் கலைந்து போய் உண்மை முகம் வெளிப்பட்டு விட்டது. இஸ்லாமிய மக்களது முதுகில் குத்துவதையே வாடிக்கையாக கொண்ட அடிமை அதிமுகவையும் அதன் தற்போதைய தளகர்த்தா பழனிச்சாமியின் துரோகத்தையும் இஸ்லாமிய மக்கள் என்றுமே மன்னிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.மு. நாசர் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட

நெசவாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ் அறிவிப்பு!

சென்னை, டிச.14-

சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி மாவட்ட அணி தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (15.12.2024 ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணி அளவில் சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் எனது (கழக த.ரமேஷ்) தலைமையில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்திற்கு மாவட்ட அணி தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் அனை வரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள். கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ் நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதி உட்பட்ட புழல் ஏரியில் 500 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளதை முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க – மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் ஒன்றிய வழக்கறிஞர் ச.அற்புதராஜ், (புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர்) உடன் இருந்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, 151வது வார்டிற்கு உட்பட்ட பூத்தப்பேடு மற்றும் அன்னை சத்யா நகர் ஆகிய பகுதிகளுக்கான ஏரியா சபைக் கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி,151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஷ் தலைமையில் வளசரவாக்கம், சுபிக்ஷா மினி ஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 151வது வார்டிற்கு உட்பட்ட ஏரியா சபை உறுப்பினர்கள் கி. முரளி,ஆர்.எஸ்.முரளி, என்.துரை,மோ. சுந்தர், ஏ. செந்தில்குமார், ப. மணிகண்டன்,கிரிஸ்டி ஃபெர்ணான்டோ, எல். சங்கர் கணேஷ், 151வது வட்ட நிர்வாகிகள் செ.இராமையா,ரா. கருணாகரன்,பாக முகவர் செல்வராஜ்,ம. வினோத், இளங்கோவன்,சதீஷ் மற்றும் ம.பார்த்திபன், சுகாதாரத் துறை பகுதி அலுவலர்,மின்துறை உதவி செயற்பொறியாளர் அரசு துறை அதிகாரிகள்,நலச்சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்களை மனுக்கள் அளித்தனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் 17வது வட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

கே. கருணாகரன் முன்னிலையில் சி. மூர்த்தி, சி.பாலாஜி, எம். என். அஜய் தென்னவன் பங்கேற்பு!

சென்னை, டிச.14-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை, நோட்டுப் புத்தகம், பென்சில் ,பேனா, ரப்பர் அடங்கிய தொகுப்பு,பரீட்சை அட்டை ஆகியவை வழங்கப்பட்டன.

முன்னதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளிடையே கேக் வெட்டி பிறந்தநாள் வாழ்த்து பாடல் பாடி எழுச்சியாக கொண்டாடப்பட்டது. அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இனிப்பு வழங்கப்பட்டன .

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி. வினோத், ஜி. ராஜ்குமார், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என் அஜய் தென்னவன்,எஸ். நாகராஜ், தீயம்பாக்கம் இ. சுதர்சன்,ஜி. பூபாலன், எம். ஜான்சன், ஜோசப், என்கின்ற விஜயன், வடபெரும்பாக்கம் மைக்கேல், செந்தில், கார்த்திக், கோவிந்தன் ,சின்ன தோப்பு முனிவேல், வக்கீல் எம் .என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் ஆசிரியர்களும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.